பக்கங்கள்: 06

THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:29 | 12.12.2023 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# மண்டியிடும் அர்த்தமற்ற சந்திப்புகள்
# அரச பேரினவாதத்துக்கு வலுவூட்டும் செயல்



தமிழர்களின் சந்திப்பு அரசியல் அதன் போது வைக்கப்படும் கோரிக்கைகள் நூற்றாண்டு காலமாக வெறும் ஏமாற்றத்தை மட்டும் வழங்கிக் கொண்டிருக்கிறது. சேர்.பொன் அருணாசலம் காலத்தில் இருந்து இதுதான் நிலை.

சரி அதற்காக சந்திக்காமல் இருக்க முடியுமா என இன்று வரை கேட்டு சந்தித்து மூக்குடைபடும் ஒரு தரப்பும், ஜனாதிபதியை சந்திப்பதை பெருமையாக கருதி வெறும் தங்கள் பிரமுகர் அரசியலுக்காக இன்னொரு தரப்பும் அல்லாடுகின்றது.

அரசு ஒரு சந்திப்புக்காக தமிழர் தரப்பை அணுகுகிறது என்றால் அதன் பின் சில முக்கியமான அரசியல் நோக்கங்கள் இருக்கும்.

தமிழ் மக்களின் வாக்குகளை திருடுவதும், சர்வதேசத்துக்கு ஒரு பொய் நாடகத்தை காட்டவுமே அனைத்து சந்திப்புகளும் இடம்பெறுகிறது.

சந்திப்புகளுக்குப் போய் அவர்களின் அரசியல் சதிவலையில் விழுவதும் சதி வலையை சேர்ந்தே பின்னுவதும் என எம் தரப்புகள் அழிகிறது.

பேரம்பேசும் ஆற்றல் கிடைக்கும் போது நாம் சந்திப்புக்கு வரவேண்டுமென்றால் எம் கோரிக்கைகளில் சிலவற்றை அரசு நிறைவேற்றிக் காட்ட வேண்டும் அதன் பின் நாம் மேடைக்கு வருகிறோம் என் பதை அடித்துக் கூற வேண்டும்.

பௌத்த துறவிகளின் அரசியல் தலையீடு ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது என்று போராடும் ஒரு இனத்தின் சார்பாக என்று சொல்லிக் கொண்டே அவர்களை அரசியல் சக்தியாக அங்கீகரித்து ஒரு கூட்டம் சந்தித்திருக்கிறது.

இப்படியான சந்திப்புக்களால் சிங்கள தரப்பிற்கு சர்வதேசத்துக்கு முன்னால் தப்பித்துக்கொள்ளும் காலக்கெடுக்களும் வாய்ப்புக்களும் தமிழர் தரப்பின் ஏனைய செயற்பாடுகளுக்கு குழி தோண்டுவதுமாகவே தொடர்ந்த வண்ணம் உள்ளது என சமூக செயற்பாட்டாளர் ரஜீவ் காந் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சியின் அடையாளம்
### தில்லைக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது




இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் 2022 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வில் ஊடகத் துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வடமராட்சி மண்ணின் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு தீம்புனல் சார்பாக வாழ்த்துகள்.

இந்த வாழ்நாள் சாதனையாளர் விருதானது இன்று 12 ஆம் திகதி கல்கிசையில் உள்ள ஹோட்டலில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து அவருக்கு வழங்கப்படவுள்ளது.

## NSBM பசுமை பல்கலைக்கழக பட்டமளிப்பு



NSBM பசுமை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வாரம் கடந்த 11-12-2023 திங்கட்கிழமை ஆரம்பமானது.

இந்த பட்டமளிப்பு வாரத்தில் NSBM மற்றும் முன்னணி வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்த 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் 4 நாட்கள் மற்றும் 11 அமர்வுகளில் பட்டங்களை பெறுகின்றனர்.

இதன் முதல் அமர்வில் இலங்கையின் ஜனாதிபதி மேன்மை தங்கிய ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கலந்துகொண்டார்.

இந்த ஆண்டு தமது 7 ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் தமது இரண்டாவது கட்டடத் தொகுதியை ஆரம்பித்து விளையாட்டு மைதானத்தையும் கடந்த 11 ஆம் திகதி திறந்து வைத்தனர்.

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை



ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளில் தலையை நுழைக்கின்றார். இது அரசியலமைப்பை மீறும் செயற்பாடாகும்.

இதனை அடிப்படையாக வைத்து, ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என சுதந்திர மக்கள் பேரவையின் செயற்குழு உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திங்கட்கிழமை (11) தெரிவித்தார்.

பேராசிரியர் ஜி.எல். நாவல சுகந்த ஜனதா சபையின் பிரதான காரியாலயத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் சர்வதேச சமூகம் இலங்கைக்கு சிவப்பு விளக்கு காட்டியுள்ளதாகத் தெரிவித்த பேராசிரியர், தேர்தல் காலத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# மீண்டும் நடைமுறைக்கு வரவுள்ள பொலிஸாரின் திட்டம்



பொதுமக்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளை சந்தித்து அவர்களிடம் நேரடியாக முறையிடும் சந்தர்ப்பம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி பொது விடுமுறை நாட்களைத் தவிர, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பொலிஸ் தலைமையகத்தில் பொதுமக்கள் தங்கள் புகார்களை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (15.12.2023) ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் கொவிட் தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாமரைக் கோபுரத்தில் சாகச விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து ‘விளையாட்டு பாய்ச்சல்’ என அழைக்கப்படும் ஒரு வகை சாகச விளையாட்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே, தலைநகரம் ஒன்றில் பல வசதிகளைக்கொண்ட 185 மீற்றர் உயரமான கோபுரத்தில் இருந்து இந்த விளையாட்டினை மேற்கொள்வது இதுவே முதல்முறை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் இந்த விளையாட்டு அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் காலத்தில் கோபுரத்துக்கு அருகாமையில் உள்ள பேரஏரியில், வெளிநாட்டு நீர் விளையாட்டு ஏற்பாட்டாளர்களின் ஒத்துழைப்புடன் பல விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர, வெளிநாட்டு முதலீட்டுடன் ‘கெசினோ’ நிலையம் ஒன்றும் இந்த கோபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தாமரைக் கோபுரத்தை பார்வையிடுவதற்காக பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் இது வரை 40 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட பலர் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திற்கு எதிராக களமிறங்கியுள்ள அரச ஊழியர்கள்

அரச சேவை மற்றும் மாகாண அரசாங்க ஊழியர்கள் இன்று சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டது.

நாளைய தினம் தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர்.

தீர்வு கிடைக்கவில்லை என்றால் சுகயீன விடுப்பு அறிக்கையை ஒரே நாளில் முடிக்க முடியாது என அரச மற்றும் மாகாண அரச சேவை சங்கங்கள் தெரிவித்தன.

# அரிசி விலையும் எகிறியது




அரிசி வியாபாரிகள் சம்பா அரிசியின் விலையை 30 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையில் உள்ள பிரதான அரிசி நிறுவனம் ஒன்று சம்பா அரிசியின் விலையை கிலோகிராம் ஒன்றுக்கு 230 ரூபாவிலிருந்து 260 ரூபாவாகவும் மற்றுமொரு நிறுவனம் சம்பா அரிசியின் விலையை 245 ரூபாவாகவும் உயர்த்தியுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிறுவனங்களுக்கு இஷ்டம்போல் விலையை அதிகரிக்க சந்தர்ப்பம் வழங்கினால், பண்டிகைக் காலம் முடிவடைவதற்குள் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் விலை 300 ரூபாவை நெருங்கும் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# யாழில் ஊடகவியலாளருக்கு மரண அச்சுறுத்தல்




யாழில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு கும்பல் ஒன்று சென்று மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலை, முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 06 பெண்கள் உள்ளிட்ட 20 பேர் தனது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, தன்னைத் தாக்க முற்பட்ட போது, அயலவர்கள் கூடியமையால் தாக்குதல் முயற்சியை கைவிட்டு, மரண அச்சுறுத்தல் விடுத்துவிட்டு, அங்கிருந்து சென்றதாக, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் தொடர்பான செய்தி ஒன்று இணையத்தள ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த நிலையில், அதனை அகற்ற கோரியே குறித்த கும்பல் மிரட்டியது என பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# ரணிலின் தீர்வுப்பொதியும் உலகத் தமிழர் பேரவையும்

அரகலய போராட்டத்தின் பின் ஆட்சிப் பீடம் ஏறிய ரணில் விக்கிரமசிங்க தனது முதலாவது உரையில் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்பு தமிழர்களுக்கான தீர்வு வழங்குவேன் என்று கூறினார். அதன்பின் தமிழர் தரப்பை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தார்.

அதில் தமிழ் தரப்பும் பேச்சுவார்த்தைக்கு சென்று எவ்வித முன்னேற்பாடும் இன்றி கிடப்பில் போடப்பட்டது. அதன்பின் புலம்பெயர் அமைப்புக்களை வெளிநாடுகளில் சந்தித்தார். அதுவும் காற்றோடு போய் விட்டது. தற்போது உலக தமிழர் பேரவையும் ரணிலை நம்பி பேச்சு வார்த்தைக்குச் சென்றுள்ளது.

தமிழ் மக்களுக்கான நம்பிக்கை தரும் நல்லெண்ண சமிக்ஞைகள் இதுவரை ரணில் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழர் தரப்பு தொடர்ந்து சிங்களத்தரப்பினால் ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்துள்ளது. தற்போதும் அதுவே நடந்து கொண்டிருக்கின்றது. இதில் திடீர் என்று புலம்பெயர் தேசத்தில் இருந்து புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு எனக் கூறும் உலகத்தமிழர் பேரவை இங்குள்ள தமிழ் தரப்புக்களிடம் கலந்துரையாடல்கள் முன்மொழிவுகள் எதுவும் இல்லாமலும் இச்சந்திப்பினால் தமிழர் தரப்பு எதிர்நோக்கவுள்ள சவால்கள் எதுவும் கருத்தில் கொள்ளாமலும் இங்குள்ள அரசியல் தரப்புக்கள் மற்றும் தமிழர் தீர்வு விடயத்தில் முன்னெடுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் எத்தகைய பாதிப்புக்கள் ஏற்படும் என்பதையும் கருத்தில் கொள்ளாமல் சிங்களத் தரப்புக்கு கிடைக்கக்கூடிய உள்ளக பொறிமுறைத் தீர்வு எனும் விடயத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் விதமாக இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று இங்குள்ள அரசியல் மற்றும் சமூகமட்ட அமைப்புக்கள் கருத்து தெரிவித்து வருகின்றன.

உண்மையில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழ் மக்களது தீர்வுக்கு செயற்படுகின்றனர் என்றால் அதற்கான முறையான கட்டமைப்புக்களையும் சமூகமட்டங்களுடனான கலந்துரையாடல்களும் கடந்த காலத்துக்கான நீதிகோரல்களும் நிகழ்காலத்துக்கான தமிழர் இருப்புக்கான பொறிமுறைகளும் எதிர்காலத்துக்கான தமிழர் மீட்சிக்கான வழிமுறைகளும் அதற்கான ராஜதந்திர செயற்பாடுகளும் ஒருங்கே கடைப்பிடிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு அவர்களிடம் உண்டு. அதை உணர்ந்து செயற்படாதவிடத்து அவர்களது முயற்சிகள் யாவும் தமிழர் தரப்புக்கே மிகவும் மோசமான விளைவுகளை உண்டு பண்ணும்.

# உக்ரைன் உலகளாவிய ஜனநாயகத்திற்காக போராடுகிறது - ஜெலென்ஸ்கி

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர்ஜெலென்ஸ்கி இன்று (12.12) அமெரிக்காவிற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பைடனுடன் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்திற்கு முன்னர், உக்ரேனிய ஜனாதிபதி உக்ரேனுக்கு மேலும் இராணுவ உதவி தேவை என்று குறிப்பிட்டு உணர்ச்சிவசப்பட்ட வேண்டுகோளை விடுத்தார்.

இராணுவ அதிகாரிகள் குழுவில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி, உக்ரைன் சுதந்திரத்திற்காக மட்டுமன்றி உலகளாவிய ஜனநாயகத்துக்காகவும் போராடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு 60 பில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காங்கிரஸிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், அந்தக் கோரிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் நிராகரிக்கப்பட்டன.



உக்ரைன் ஜனாதிபதியும் இந்த விஜயத்தின் போது சபாநாயகர் மைக் ஜோன்சனைச் சந்தித்து இராணுவ உதவிக்கான கோரிக்கைகளை முன்வைக்க உள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருக்கு கொலை மிரட்டல்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்கள் அடுத்த ஆண்டு (2024) நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரப் பணிகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நியூ ஹாம்ப்ஷயர் பகுதியில் பிரச்சார நிகழ்வுக்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொலை அச்சுறுத்தல் எந்த வேட்பாளருக்கு விடுக்கப்பட்டது என்ற தகவலை அமெரிக்க வழக்கறிஞர் அலுவலகம் வெளியிடவில்லை. இருப்பினும் குறித்த அச்சுறுத்தல் விவேக் ராமசாமிக்கு விடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயத்தைக் கையாள்வதில் சட்ட அமுலாக்கத்தின் விரைவான தன்மை மற்றும் தொழில் முறைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் அனைத்து அமெரிக்கர்களின் பாதுகாப்பிற்காகவும் பிரார்த்தனை செய்கிறோம் என்றும் துணை தகவல் தொடர்பு இயக்குநர் ஸ்டீபன் மைசாஜ்லிவ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் டோவரைச் சேர்ந்த டைலர் ஆண்டர்சன் என்ற 30 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


# ஆப்கானிஸ்தானில் தொடரும் நிலநடுக்கங்கள்

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கமானது இன்று (12.12.2023) காலை 7.35 மணியளவில் 120 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

5.2 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 4,000 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் பல்லாயிரக்கணக்



கானோர் படுகாயமடைந்தனர்.

அதனையடுத்து ஒக்ரோபர் 13, 15 மற்றும் நவம்பர் 21 ஆம் திகதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (10) 4.8 ரிக்டர் அளவிலும், நேற்று (11) 4.4 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இன்றும் (12) 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிசி இறக்குமதி தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள தகவல்

இந்த பண்டிகைக் காலத்தில் அரிசியை இறக்குமதி செய்யவில்லை என்றால் அரிசியின் விலை வேகமாக அதிகரித்திருக்கும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (11.12.2023) நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மிகவும் சவால் மிக்க சந்தர்ப்பத்திலேயே நான் இந்த அமைச்சை ஏற்றுக் கொண்டேன். வயல்களுக்கு சென்று பயிரிடுமாறு நான் முதல் முதலாக விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினேன்.

அன்று 212,000 ஹெக்டெயர்கள் நெல் பயிரிடப்பட்டது. ஆனால், இந்த விளைச்சலை அதிகரிக்க ஆர்வத்துடன் செயற்படுமாறு நான் மிகவும் தாழ்மையுடன் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தேன். உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்பயிரிடுமாறு நான் கூறினேன். அதன் பிறகு 512,000 ஹெக்டெயர்கள் நெல் பயிரிடப்பட்டது. இதுவே அண்மைக்காலத்தில் கிடைத்த அதிக விளைச்சலாகும். அன்றும் பல்வேறு சவால்கள் காணப்பட்டன.

தரம் குறைவான உரம் கொண்டுவரப்படுவதாகவும், நிறை குறைந்தது என்றும் கூறப்பட்டது. உரங்களில் புழுக்கள் இருப்பதாகவும் கூறினார்கள். ஆனால் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.

# இன்று முதல் அதிகரிக்கும் கோழி இறைச்சியின் விலை



சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை இன்று முதல் அதிகரிக்க மொத்த வியாபாரிகள் தீர்மானித்துள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது. அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சி 30 ரூபா முதல் 50 ரூபாவரை அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு கிலோ கோழி இறைச்சி 1,200 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில் இன்று முதல் 1,250 ரூபாய்க்கு உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் பல பண்ணை உரிமையாளர்கள் இந்தத் தொகையை நேற்றைய தினமே அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சம்பள உயர்வு கோரி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை




அரச மற்றும் அரச சேவை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சுகயீன விடுமுறை போராட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. குறித்த போராட்டமானது இன்று(12.12.2023) நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

20,000 ரூபாய் கொடுப்பனவு உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமது கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலிக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக கூட்டமைப்பின் அழைப்பாளர் சந்தன சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

# யாழில் வழிப்பறி கொள்ளை

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்றனர்.

அச்சுவேலி நாவற்காடு வீதியில் பாடசாலையொன்றுக்கு அருகில் நேற்று (11) மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றது. ஒரு பவுண் காப்பும் அரைப்பவுண் மோதிரமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமையில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பெண் அணிந்திருந்த நகைகளை பறிக்க முயன்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதன் போது மழைக்கவச அங்கி மூலம் உடலை முற்றாக மூடி முச்சக்கரவண்டியொன்றில் வந்த மர்ம நபரொருவர் பெண்ணை தாக்கிய நிலையில் இருவரும் பெண் அணிந்திருந்த நகைகளை பறித்து சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி



உள்நாட்டில் உள்ள 1,500 தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டின் வருடாந்த தேங்காய்எண்ணெய்க்கான கேள்வி, 2 இலட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக் தொன்னாகும். இந்த நிலையில், ஒரு கோடியே 77 இலட்சம் கிலோகிராம் அளவில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காக 7891 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. இதனால் எமது தொழிற்துறை பாரியளவில் பாதிப்படைந்துள்ளது என குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

# கழியாட்ட நிகழ்வுகளை யாழில் ஏற்றுக்கொள்ள முடியாது

DJ Night என்ற பெயரில் களியாட்ட நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், அனுமதியின்றி நடாத்தப்பட்ட நிகழ்வுக்கு எதிராக யாழ்.மாநகர சபை வழக்கு தொடர வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (11) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

DJ Night என்ற பெயரில் களியாட்ட நிகழ்வொன்று யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடாத்தப்பட்டுள்ளது. கடந்த முறை சர்ச்சை எழுந்தபோது வியாபாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக விடுதியின் பெயரை நாம் பாவிக்கவில்லை. ஆனால், கடும் எதிர்ப்புகள் வந்த போதும் யாழ் மாநகர சபையின் அனுமதியையும் மீறி DJ Night என்ற பெயரில் களியாட்ட நிகழ்வு மீளவும் நடத்தப்பட்டதாக அறிகிறோம். இவ்வாறாக சமூகத்தை சீரழித்து வருமானம் உழைப்பதை இவர்கள் கைவிட வேண்டும். இதற்கு எதிராக நாம் போராட வேண்டிய சூழல் வரும்.

குறித்த நிகழ்வுக்கு யாழ் மாநகர சபையிடம் அனுமதி கோரப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில் அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இது சட்டவிரோதமான செயற்பாடு.

இதற்கு எதிராக மாநகர சபை நடவடிக்கை எடுக்க முடியும்.அனுமதியின்றி நடாத்தப்பட்ட நிகழ்வுக்கு எதிராக யாழ் மாநகர சபை வழக்கு தொடர வேண்டும்.

குறித்த விடயத்தில் சமூக நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்று திரண்டு எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும். மிகவிரைவில் இதற்கான எதிர்ப்பை பதிவு செய்வோம் என தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிள்கள் விபத்து

கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த விபத்தானது நேற்று (11.12.2023) மாலை இடம்பெற்றுள்ளது. தர்மபுரம் பகுதியிலிருந்து இராமநாதபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், இராமநாதபுரம் பகுதியில் இருந்து தர்மபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.











# NSBM பல்கலைக்கழக பட்டமளிப்பு வாரம் - 2023




























# ஐ.சி.சியின் புதிய விதி "ஸ்டாப் கிளாக் ரூல்" இங்கிலாந்து போட்டியில் அறிமுகம்

மற்ற போட்டிகளை விட கிரிக்கெட் போட்டி நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளும் ஒரு போட்டியாகும். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக ரி20 போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது ரி10 போட்டிகளும் கிளப் மற்றும் லீக் போட்டிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

கிரிக்கெட் போட்டிகளில் காலதாமதம் ஏற்படும் போது அதற்காக அபராதம் மற்றும் பெனால்டி விதிக்கும் முறை தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது. உதாரணமாக, ஒருநாள் கிரிக்கெட் போட்டி 7 மணி நேரம் 45 நிமிடங்களுக்குள் முடிய வேண்டும். இதில் பீல்டிங் செய்யும் அணியால் காலதாமதம் ஏற்படும் போது அந்த அணியின் கேப்டனுக்கு அபராதம் விதிக்கப்படும். கடந்த ஆண்டு இந்த விதிமுறையில் மாற்றம் கொண்டுவரப்பட்டது.

பீல்டிங் செய்யும் அணி குறித்த நேரத்திற்குள் ஓவர்கள் வீசி முடிக்கவில்லை என்றால் தாமதமாக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் இறுதி ஓவர்களில் ஐந்து வீரர்களை உள் வட்டத்திற்குள் நிறுத்த வேண்டும் என்ற புதிய விதி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மீண்டும் ஒரு புதிய விதியை ஒரு நாள் கிரிக்கெட் மற்றும் ரி20 கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இந்த புதிய விதி நாளை தொடங்க இருக்கும் இங்கிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான ரி20 போட்டியில் இருந்து ஆரம்பம் ஆகிறது. இந்த புதிய விதி டிசம்பர் 2023 இல் இருந்து ஏப்ரல் 2024வரை பரிசோதித்து பார்க்கப்படும். இது எவ்வாறு செயல்படுகிறது என்பதை பொறுத்து வரும் காலங்களில் முடிவு செய்யப்படும் என அகமதாபாத்தில் நடைபெற்ற ஐ.சி.சி ஜெனரல் மீட்டிங்கில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த புதிய விதிமுறையின் படி வெஸ்ட் இண்டீஸ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே தொடங்கும் போட்டியில் ஸ்டாப் கிளாக் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது .





இந்த புதிய விதிமுறையில் ஒவ்வொரு ஓவர் வீசப்படும் நேரத்தையும் நடுவர்கள் தங்களது ஸ்டாப் கிளாக்கில் குறித்துக் கொள்வார்கள். ஒரு ஓவர் முடிந்த நேரத்திலிருந்து 60 நொடிகளுக்குள் அடுத்து ஓவர் வீசப்பட வேண்டும். மேலும் இந்த விதிமுறை மீறப்படும் போது இரண்டு முறை நடுவர்கள் எச்சரிக்கை கொடுப்பார்கள். மூன்றாவது முறையும் இதே தவறு நடந்தால் பந்து வீசும் அணிக்கு எதிராக 5 ஓட்டங்கள் பெனால்ட்டியாக வழங்கப்படும். இதன் மூலம் பேட்டிங் செய்யும் அணிக்கு 5 ஓட்டங்கள் போனஸாக கிடைக்கும்.

ஏற்கெனவே இருக்கும் 41.9 விதிமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு இந்த புதிய விதிமுறை 41.9.4 கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த புதிய விதி தொடர்பாக ஐ.சி.சி ஜெனரல் மேனேஜர் வாசிம் கான் வெளியிட்டு இருக்கும் அறிக்கையில் "சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வேகப்படுத்தும் பொருட்டு இந்த ஸ்டாப் கிளாக் விதிமுறை பரிசோதனை செய்யப்பட இருக்கிறது. 2022 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிமுறையின் வெற்றியை தொடர்ந்து ஸ்டாப் கிளாக் விதி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட இருக்கிறது. இந்த சோதனையின் இறுதியில் கிடைக்கும் முடிவுகளை வைத்து எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும்" என தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த புதிய விதிமுறை 2018 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற எம்.சி.சி கிரிக்கெட் மாநாட்டில் சவுரவ் கங்குலி ரிக்கி பாண்டிங் மற்றும் குமார் சங்ககாரா ஆகியோரால் பரிந்துரை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கால்பந்து போலவே கிரிக்கெட்டிலும் இந்த புதிய விதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது ரசிகர்களிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# இலங்கை கிரிக்கெட்டின் புதிய தெரிவுக்குழு உறுப்பினர்கள் நியமனம்

ஐந்து பேர் கொண்ட புதிய கிரிக்கெட் தெரிவுக் குழுவை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பெயரிட்டுள்ளார். இதன் தலைவராக முன்னாள் தலைவர் உபுல் தரங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் வீரர்களான தில்ருவான் பெரேரா, தரங்க பரணவிதான, அஜந்த மெண்டிஸ் மற்றும் இந்திக டி செரம் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர்.



புதிய தேசிய கிரிக்கெட் தெரிவுக்குழு இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தி அண்மையில் ஓய்வு பெற்ற நான்கு வீரர்களை கொண்ட புதிய தேசிய கிரிக்கெட் தெரிவுக்குழுவை நியமிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நடவடிக்கை எடுத்திருந்தார். இதன்படி முன்னாள் தொடக்க வீரர் உபுல் தரங்க தலைமையிலான புதிய கிரிக்கெட் தெரிவுக் குழுவில் சுழற்பந்து வீச்சாளர்களான தில்ருவான் பெரேரா மற்றும் அஜந்த மெண்டிஸ் மற்றும் முன்னாள் தொடக்க வீரர் தரங்க பரணவிதான ஆகியோர் புதிய தெரிவுக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல் 2024 வீரர்களின் ஏலப்பட்டியல்

உலக நாடுகளின்கவனத்தை ஈர்த்துள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கான ஏலம் விடப்படும் வீரர்களின் பட்டியலை போட்டி ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ளனர். இந்த ஏலத்தில் 333 வீரர்கள் பங்கேற்றுள்ளனர், அதில் 214 வீரர்கள் இந்திய வீரர்கள் என கூறப்படுகிறது. ஏலம் விடப்படவுள்ள 119 வெளிநாட்டு வீரர்களில் 8 இலங்கை வீரர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். அதிகபட்ச ஏலத் தொகை இலங்கைவீரர் ஒருவருக்கு இதுவரை அளிக்கப்பட்ட அதிகபட்ச ஏலத் தொகையாக 1.5 கோடி இந்திய ரூபாய் காணப்படுகிறது. குறித்த பெறுமதி பிரிவின் கீழ் வனிந்து ஹசரங்க ஏலத்திற்கு தெரிவாகியுள்ளார்.



ஐ.பி.எல் 2024 விளையாட்டு வீரர்களுக்கான ஏலம் எஞ்சிய 7 வீரர்கள் இம்முறை ஏலத்தில் 50 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான வகையில் ஏலப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். குசல் மெண்டிஸ், டில்ஷான் மதுஷங்க, சரித் சசங்க, தசுன் ஷனக, துஷ்மந்த சமிர, லஹிரு குமார மற்றும் நுவன் துஷார ஆகியோர் இலங்கையில் இருந்து ஐ.பி.எல் ஏலத்தில் இடம் பெற்றுள்ள ஏனைய வீரர்கள் ஆவர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 12.12.2023 அன்று வெளியிடப்பட்டது.